LIBRARY 22 DEC 2016 EASTERN UNIVERSITY, SRI LANKA

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருடம்/இரண்டாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு – 2012/2013
(பெப்ரவரி 2016)

## EDU 1201 கல்வியும் மனித அபிவிருத்தியும்

நேரம் : 02 மணித்தியாலங்கள்

முதலாம் வினாவிற்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்கும் விடை தருக.

தெளிவற்ற எழுத்துக்களுக்கு புள்ளிகள் வெட்டப்படும்.

---

### பகுதி – I

01.(அ) "ஏனைய வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனெனில் முதலில் மனிதவளம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பது வெளிப்படையாகும்." மனிதவள அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) மனிதவள அபிவிருத்தியில் கையாளப்படும் உத்திகளில் "ஊக்குவிப்பு" மற்றும் "வேலைக்களச்சூழல்" என்பன அபிவிருத்தியை துரிதப்படுத்தும் செயன்முறையாகும். இதனை இன்றைய நிலைப்பாட்டோடு தொடர்புபடுத்தி ஆராய்க.

(15 புள்ளிகள்)

02.(அ) "நேரவளத்தினை முறையாக முகாமை செய்வதினால் மனிதவள அபிவிருத்தியில் பாரிய மாற்றம் ஏற்படுத்தும்." இதனை மாணவனின் கற்றல் அபிவிருத்திப் பாதையை மையமாகக் கொண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) "முரண்பாட்டு முகாமைத்துவம் என்பது நிறுவன ரீதியாக இன்று வெகுவாக உணரப்படுகின்றது." கல்விசார் நிர்வாகத்தினை மையமாகக்கொண்டு பாடசாலைகளில் அதிபர்கள் எவ்வகையில் முரண்பாடுகளைக் களைந்து பாடசாலையை அபிவிருத்திக்காக வழிவகுக்கின்றனர் என்பதனை ஆராய்க.

(15 புள்ளிகள்)

03.(அ) மனிதவள அபிவிருத்தி என்பது காலத்திற்கு பொருத்தமானதாக மாறிக்கொண்டிருக்க வேண்டிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தவகையில் மாற்றத்தின் மூன்று அடிப்படை அம்சங்களின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(20 புள்ளிகள்)

(ஆ) "மாற்றங்களை கட்டாயமாக உள்வாங்கும் துறையாக கல்வித்துறை காணப்படுகின்றது." தற்காலத்திற்கு பொருத்தமான கல்விசார் மாற்றங்கள் என்றவகையில் உள்வாங்கப்படும் மாற்றங்களை விமர்சன ரீதியாக எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி – II

04.(அ) குடும்பம் - சமூகம் சார் அபிவிருத்திக்காக பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டு, அவை எவ்வளவு தூரம் சாத்தியப்பட்டிருக்கின்றதென்பதை களப்பயணத்தின்போது நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவத்தினூடாக விமர்சனம் செய்க.

(25 புள்ளிகள்)

(ஆ) "சவால்கள் அற்ற பாடசாலைகள்" என்பதன்மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது? இதனை மாணவர் சார் தனியாள் அபிவிருத்திகளோடு தொடர்புபடுத்தி விளக்குக.

(15 புள்ளிகள்)

05. சுருக்கமான விளக்கவுரை தருக.

(அ) தேசிய ஒருமைப்பாட்டுக்கல்வி

(ஆ) கல்விசார் அபிவிருத்திகளும் அரசியற் செல்வாக்கும்

(இ) ஆசிரியர் தம்மை அபிவிருத்தியாக்க வேண்டிய தேவைகளும் வழிமுறைகளும்

(ஈ) முழுமையான மனிதனை உருவாக்குவதில் கல்விசார்பாக மேற்கொள்ளப்படும் அடிப்படைத் தேர்ச்சிகள்.

(4 x10=40 புள்ளிகள்)

*****